**மார்ச் – 25**

# TNPSC துளிகள்


- தொகுதி மறுசீரமைப்பு நடவடிக்கைகளால் பாதிக்கப்படும் மாநிலங்களுக்கான முதல் கூட்டு நடவடிக்கைக் குழுக் (JAC) கூட்டத்தினைத் தமிழ்நாடு அரசு ஏற்பாடு செய்தது.
- துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் துறை அமைச்சகம் (MoPSW), பசுமை முறையிலான ஒரு கப்பல் போக்குவரத்து, திறன்மிகு துறைமுகங்கள் மற்றும் தளவாடங்களில் கடல்சார் புத்தாக்கங்களை ஊக்குவிப்பதற்காக வேண்டி சாகர்மாலா புத்தொழில் புத்தாக்க முன்னெடுப்பினைத் (S2I2) தொடங்கியுள்ளது.
- 2024–25 ஆம் நிதியாண்டிற்கான தனிநபர் வணிகத்திற்கு மேற்கொள்ளும் குறைந்த மதிப்புள்ள அதாவது சுமார் 2,000 ரூபாய் அல்லது அதற்கும் குறைவான BHIM-UPI பரிவர்த்தனைகளை ஊக்குவிப்பதற்கான ஒரு ஊக்கத் திட்டத்தினை நிதி அமைச்சகம் அறிமுகப்படுத்தியுள்ளது.
- டார்ஜிலிங்கின் பத்மஜா நாயுடு இமயமலை விலங்கியல் பூங்காவானது, அருகி வரும் இமயமலை உயிரினங்களின் மரபணுத் தகவல்களைப் பாதுகாப்பதற்காக என்று இந்தியாவின் முதல் உறைந்த/பதப்படுத்தப்பட்ட விலங்கியல் பூங்காவைத் தொடங்கி உள்ளது.
- டாடா கம்யூனிகேஷன்ஸ் லிமிடெட் நிறுவனமானது, நிறுவனங்களுக்கு என்று செலவு குறைந்த மேகக் கணினி நுட்பத்தினை வழங்குவதற்காக வேண்டி வாயு எனும் அடுத்த தலைமுறை நுட்பத்திலான மேகக் கணிம கட்டமைப்பினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- 1975 ஆம் ஆண்டில் இந்தியாவின் முதல் ஹாக்கி உலகக் கோப்பை போட்டியில் பெற்ற வெற்றியின் பொன் விழாவை நினைவு கூரும் வகையில், ஹாக்கி வரலாற்றாசிரியர் K.ஆறுமுகம் மற்றும் பத்திரிகையாளர் எரோல் டி'குரூஸ் இணைந்து எழுதிய 'March of Glory' என்ற புத்தகம் சமீபத்தில் வெளியிடப்பட்டுள்ளது.
- 2025 ஆம் ஆண்டு மாற்றுத் திறனாளிகளுக்கான கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகளுக்கான கீதம், உருவச்சின்னம் (உஜ்வாலா) மற்றும் முத்திரையினை புது டெல்லியில் வெளியிடப்பட்டுள்ளது.
- நயாரா எனர்ஜி நிறுவனம் ஆனது, குஜராத் ஜாம்நகரில் உள்ள கிஜாடியா பறவைகள் சரணாலயத்தின் வளங்காப்பு மற்றும் மறுசீரமைப்பிற்காக குஜராத் மாநில அரசின் வனத்துறையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டது.
- கிழக்குக் கடற்கரை இரயில்வே (ECoR) நிர்வாகமானது, 2024-25 ஆம் நிதியாண்டில் 250 மில்லியன் டன் (MT) சரக்குகளை ஏற்றிய இந்தியாவின் முதல் இரயில்வே மண்டலமாக மாறி சரக்கு ஏற்றுதலில் ஒரு வரலாற்று மைல்கல்லை அமைத்துள்ளது.
- ஆந்திரப் பிரதேச மாநில அரசானது, 1953 ஆம் ஆண்டு தெலுங்கு மொழி பேசும் மக்கள் வசிக்கும் தனி ஆந்திர மாநிலத்தினை உருவாக்குவதில் மிக முக்கியப் பங்கு வகித்த சுதந்திரப் போராட்ட வீரர் பொட்டி ஸ்ரீராமுலுவின் 58 அடி உயரம் கொண்ட சிலையை அமராவதியில் நிறுவ உள்ளதாக அறிவித்துள்ளது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## 2024 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் பதிவான காட்டுத்தீ நிகழ்வுகள்

- 2023-24 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலத்தில் 3,380 காட்டுத் தீ விபத்துகள் பதிவானது: இது கடந்த நான்கு ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு அதிகமாகும்.

- இது 2021-22 ஆம் ஆண்டில் பதிவான 1,035 விபத்துகள் மற்றும் 2022-23 ஆம் ஆண்டில் பதிவான 1,998 தீ விபத்துகளிலிருந்து கடுமையான அதிகரிப்பைக் குறிக்கிறது.
- 2001 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கு இடையில் ஏற்பட்ட தீ விபத்துகளால் தமிழ்நாடு மாநிலத்தில் 1.04 கிலோமீட்டர் ஹெக்டேர் (கிலோஹெக்டேர்) மரங்கள் அழிந்துள்ளது.
- 2023 ஆம் ஆண்டில் அதிகபட்சமாக 148 ஹெக்டேர் (ஹெக்டேர்) இழப்பு பதிவானது என்ற ஒரு நிலையில் இது அந்த ஆண்டு இழந்த மொத்த மரப் பரப்பில் 6.8 சதவீதத்தைக் குறிக்கிறது.
- VIIRS (கட்புலனாகும் அகச்சிவப்பு வரைபடமாக்கல் கதிர்வீச்சுமானி தொகுப்பு) போன்ற கண்காணிப்பு அமைப்புகள் ஆனது, சமீபத்தியக் காலங்களில் வழக்கத்திற்கு மாறாக அதிக தீ எச்சரிக்கைகளைக் கண்டறிந்துள்ளன.
- 1951 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்படத் தொடங்கியதிலிருந்து, 2024 ஆம் ஆண்டில் ஊட்டி பகுதியில் அதன் அதிகபட்ச வெப்பநிலையான 29 டிகிரி செல்சியஸ் பதிவானது.
- சமீபத்தியத் தமிழக வரலாற்றில் மிகவும் அழிவுகரமான காட்டுத் தீகளில் ஒன்று 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் தேனி மாவட்டத்தில் உள்ள குரங்கணியில் ஏற்பட்டது.




# தேசியச் செய்திகள்

## சமர்த் காப்பு மையத் திட்டம்

- தகவல் தொடர்பு மேம்பாட்டு மையம் (C-DoT) "சமர்த்" என்று பெயரிடப்பட்ட காப்பு மையத் திட்டத்தின் முதல் குழுவைத் தொடங்க உள்ளது.
- இது இந்தியாவின் தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறைகளில் புதுமைகளை வளர்ப்பதிலும் தொழில்நுட்ப முன்னேற்றங்களை ஊக்குவிப்பதிலும் கவனம் செலுத்துகிறது.
- இது தொலைத்தொடர்பு மென்பொருள் செயலிகள், இணையவெளிப் பாதுகாப்பு, 5G/6G, AI, IoT மற்றும் துளிமத் தொழில்நுட்பங்களில் புத்தொழில் நிறுவனங்கள் மற்றும்

கண்டுபிடிப்பாளர்களை ஆதரிக்கும்.




# சர்வதேசச் செய்திகள்

## ஒட்டாவா ஒப்பந்தம்




- போலந்து மற்றும் லிதுவேனியா, லாத்வியா மற்றும் எஸ்டோனியா போன்ற பால்டிக் நாடுகள் ஒட்டாவா ஒப்பந்தத்திலிருந்து வெளியேறத் தயாராகி வருகின்றன.
- கண்ணி வெடி தடை ஒப்பந்தம் என்றும் அழைக்கப்படும் ஒட்டாவா ஒப்பந்தம் ஆனது 1997 ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்தது.
- இது உலகளவில் மனிதர்களைத் தாக்குவதை இலக்காகக் கொண்ட, மனிதர்களுக்கு எதிரான கண்ணிவெடிகளின் பயன்பாட்டினைத் தடை செய்வதை ஒரு நோக்கமாகக் கொண்டுள்ள இந்த ஒப்பந்தத்தில் 160 க்கும் மேற்பட்ட நாடுகள் கையெழுத்திட்டன.
- ஆனால் சீனா, இந்தியா, ரஷ்யா, பாகிஸ்தான் மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட சில முக்கிய இராணுவ வலிமை நிறைந்த நாடுகள் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட வில்லை.
- 2005 ஆம் ஆண்டில் அனைத்து பால்டிக் நாடுகளும் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்து இட்டன என்பதோடு போலந்து 2012 ஆம் ஆண்டில் இதில் இணைந்தது.
- உக்ரைன் நாடானது ஒட்டாவா ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருந்தாலும், ரஷ்யாவின் தாக்குதலின் போது அமெரிக்காவிடமிருந்து கண்ணிவெடிகளைப் பெற்றுள்ளது.

- இந்த ஒப்பந்தத்தின் 20வது பிரிவானது, தற்போது போரில் ஈடுபட்டிருந்தால் ஒரு நாடு ஒப்பந்தத்திலிருந்து விலக முடியாது என்று குறிப்பிட்டுக் கூறுகிறது.
- உக்ரைன் நாடு தற்போது உலகிலேயே அதிக எண்ணிக்கையில் கண்ணி வெடிகள் பயன்படுத்தப்பட்ட நாடு ஆக ஐக்கிய நாடுகள் சபையினால் மதிப்பிடப்பட்டுள்ளது.

# பொருளாதாரச் செய்திகள்

## இந்தியாவின் புகையிலை ஏற்றுமதி 2024/25

- மிகவும் அதிகரித்து வரும் உலகளாவிய தேவை காரணமாக இந்தியாவின் புகையிலை ஏற்றுமதி கடந்த நான்கு ஆண்டுகளில் டாலர் மதிப்பின் அடிப்படையில் இரட்டிப்பாகி உள்ளது.
- 2021-22 ஆம் ஆண்டில் 923 மில்லியன் டாலராக இருந்த இந்தியாவின் ஏற்றுமதி மதிப்பு ஆனது, நடப்பு நிதியாண்டில் பிப்ரவரி மாதம் வரையில் 1,840 மில்லியன் டாலருக்கும் அதிகமாக அதிகரித்துள்ளது.
- மார்ச் மாத இறுதிக்குள் அவை 2 பில்லியன் டாலரைத் தொடும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- இங்கு புகையிலை ஏற்றுமதியானது 2024-25 ஆம் ஆண்டின் ஏப்ரல்-பிப்ரவரி மாத காலக் கட்டத்தில் 38.59 சதவீத வளர்ச்சியுடன் 1,840.70 மில்லியன் டாலராக இருந்தது என்ற ஒரு நிலையில் இது ஓராண்டிற்கு முன்னதாக 1,328.17 மில்லியன் டாலராக இருந்தது.
- புகையிலை ஏற்றுமதியானது பிப்ரவரி மாதத்தில் 141.80 மில்லியன் டாலராக (111.87 மில்லியன் டாலர்) இருந்தது.

| Financial Year | In $ million | In ₹ crore |
|---|---|---|
| 2024-25 (April-Feb) | 1,840.70 | 15,529.81 |
| 2023-24 | 1,449.54 | 12,005.89 |
| 2022-23 | 1,213.37 | 9,739.75 |
| 2021-22 | 923.4 | 6,880.21 |
| 2020-21 | 876.58 | 6,496.09 |
| 2019-20 | 897.78 | 6,408.15 |


# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## குறிப்பிட்ட நபர் மட்டும் கேட்கக்கூடிய சூழல்

- குறிப்பிட்ட நபர் மட்டும் கேட்கக் கூடிய சூழல் என்பது சுற்றியுள்ளச் சத்தத்தினால் இடையூறு செய்யப் படாத சிறிய ஒலிசூழ் பகுதிகளாகும்.
- அவை ஒருவர் கூட்டத்தில் இருந்தாலும் கூட ஒரு குறிப்பிட்ட நபர் மட்டுமே கேட்கக் கூடிய ஒலிகளை வழங்கச் செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்ட புதிய தொழில் நுட்பங்களால் தயாரிக்கப்படுகின்றன.
- அமெரிக்காவில் உள்ள ஆராய்ச்சியாளர்கள் வெவ்வேறு அதிர்வெண்களைக் கொண்ட


இரண்டு உயர் அதிர்வெண் அலைகளைப் பயன்படுத்தி இதை உருவாக்கியுள்ளனர்.

- அவை இந்த வடிவத்தில் தனித்தனியாக இருக்கும் போது நம்மால் கேட்கமுடியாது.
- ஆனால் அவற்றில் குறுக்கீடு ஏற்படும் போது, பலபடித்தான தொடர்புகள் அந்த இடத்தில் அருகிலுள்ளவர்களுக்கு மட்டுமே கேட்கக் கூடிய அளவில் ஓர் ஒலி அலையை உருவாக்குகின்றன.
- ஒலி அலை கையாளுதலை அடிப்படையாகக் கொண்ட இந்த தொழில்நுட்பம் ஆனது, தேவையுள்ள நபர்கள் மட்டுமே இந்த ஒலியைக் கேட்க முடியும் என்பதை நன்கு உறுதி செய்கிறது.




# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## பருவநிலை குறித்த அறிக்கை 2024





- 2024 ஆம் ஆண்டானது 175 ஆண்டு காலக் கண்காணிப்பு பதிவில் மிகவும் வெப்பமான ஆண்டாகப் பதிவாகியுள்ளது.
- தொழில்துறைக்கு முந்தைய சகாப்தத்தை விட 1.5°C க்கும் அதிகமாக இருந்த முதல் ஆண்டாக இது இருக்கலாம்.

- உலகளாவிய சராசரி மேற்பரப்பு வெப்பநிலையானது 1850-1900 ஆம் காலக் கட்டத்தில் பதிவான சராசரியை விட 1.55 ± 0.13°C அதிகமாக உள்ளது.
- 1960 ஆம் ஆண்டு முதல் வெப்பமயமாதல் விகிதங்கள் இரட்டிப்பாகியுள்ளதுடன், 2024 ஆம் ஆண்டில், கடந்த 65 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு கடல் வெப்பம் அதிகமாக இருந்தது.
- 1993 மற்றும் 2002 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் பதிவான 2.1 மில்லிமீட்டர் என்ற வருடாந்திர அதிகரிப்பு ஆனது 2015 மற்றும் 2024 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் 4.7 மில்லிமீட்டர் அதிகரிப்பினை விட குறைவாகும்.
- 2024 ஆம் ஆண்டில் வெப்பமண்டலப் புயல்கள், வெள்ளம், வறட்சி மற்றும் இன்ன பிற ஆபத்துகள் காரணமாக 2008 ஆம் ஆண்டிற்குப் பிறகு மிக அதிக எண்ணிக்கையிலான மக்கள் இடம்பெயர்ந்தனர்.
- 2024 ஆம் ஆண்டில் சுமார் 36 மில்லியன் மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.
- எட்டு நாடுகளில், 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது குறைந்தது ஒரு மில்லியன் மக்கள் கடுமையான உணவுப் பாதுகாப்பின்மை நிலையை எதிர்கொண்டனர்.
- 2023 ஆம் ஆண்டில், வளிமண்டல $CO_2$ வாயு அளவானது தொழில்துறைக்கு முந்தைய நிலைகளில் 151% அளவினை எட்டியது என்பதோடு இது 800,000 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு மிக அதிகமாகும்.

# மாநிலச் செய்திகள்

## ஷ்யாமா பிரசாத் முகர்ஜி நகர்ப்புற வசதிகளை கிராமப்புறத்தில் வழங்கும் திட்டம்





- கிராமப்புறச் சமூக வாழ்க்கையைப் பாதுகாத்து, கிராமப்புற இந்தியாவில் நகர்ப்புற வசதிகளை அணுகுவதை நன்கு உறுதி செய்வதோடு, சுமார் 300 கிராமக் குழுக்களை மேம்படுத்துவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.
- கிராமப்புற-நகர்ப்புற இடைவெளியினை இணைக்கும் ஒரு நோக்கம் கொண்ட இது 34 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களை உள்ளடக்கியது.
- தேசிய அளவிலான இத்தரவரிசையில் 96.32 மதிப்பெண்களுடன் தமிழ்நாடு மாநிலம்

முதலிடத்திலும், அதைத் தொடர்ந்து மிசோரம் (93.96), உத்தரப் பிரதேசம் (92.37), மற்றும் தெலுங்கானா (91.87) ஆகிய மாநிலங்கள் இடம் பெற்றுள்ளன.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## 59வது ஞானபீட விருது

- புகழ்பெற்ற இந்தி மொழிக் கவிஞரும் புதின ஆசிரியருமான வினோத் குமார் சுக்லா 2024 ஆம் ஆண்டிற்கான 59வது ஞானபீட விருதிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- சத்தீஸ்கர் மாநிலத்திலிருந்து, மதிப்புமிக்க இந்த விருதைப் பெற்ற முதல் நபர் இவரே ஆவார்.
- ஞானபீட விருது ஆனது 1961 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- இந்த விருதானது முதன்முதலில் மலையாளக் கவிஞர் G. சங்கர குருப் என்பவருக்கு 1965 ஆம் ஆண்டு "ஓடக்குழல்" என்ற அவரது கவிதைத் தொகுப்பிற்காக வழங்கப்பட்டது.
- இந்த விருதானது, ஒரு இந்தியர் மற்றும் உயிருடன் உள்ள எழுத்தாளர்களுக்கு மட்டுமே வழங்கப் படுகிறது.





# முக்கிய தினங்கள்

## உலகப் பனிப்பாறைகள் தினம் - மார்ச் 21

- ஐக்கிய நாடுகள் சபையானது 2025 ஆம் ஆண்டினை சர்வதேச பனிப்பாறைகள் வளங் காப்பு ஆண்டாகவும், மார்ச் 21 ஆம் தேதியினை முதலாவது உலகப் பனிப்பாறைகள் தினமாகவும் அறிவித்துள்ளது.
- பருவநிலை மாற்ற அச்சுறுத்தல்களுக்கு மத்தியில், பனிப்பாறைகளின் மிக முக்கியப் பங்கையும் அவற்றின் வளங்காப்பிற்கான மொத்த அவசரத் தேவையையும் எடுத்துக் காட்டுவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

- ஐரோப்பாவின் ஆல்ப்ஸ் மற்றும் பைரனீஸ் மலைகள் 2000 முதல் 2023 ஆம் ஆண்டு வரை அவற்றின் பனிப்பாறை அளவின் 40 சதவீதத்தை இழந்துள்ளன.
- வருங்கால பனிப்பாறை ஏரி உடைப்பினால் ஏற்படும் வெள்ள நீர் ஆனது அதன் ஓட்டப் பாதையில் வசிக்கும் சுமார் 35,000 மக்களின் உயிருக்கு அச்சுறுத்தலாக இருக்கலாம்.




## சர்வதேச வன தினம் - மார்ச் 21




- இது 2012 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையால் (UNGA) நிறுவப் பட்டது.
- பருவநிலைக் கட்டுப்பாடு, மனித நல்வாழ்வு மற்றும் பல்லுயிர்ப் பெருக்கத்தில் இந்தக் காடுகளின் முக்கியப் பங்கில் கவனம் செலுத்துவதே இந்த நாளின் நோக்கமாகும்.

- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Forest and Food" என்பதாகும்.


## உலக மன நலிவு நோய் தினம் - மார்ச் 21




- மன நலிவுப் பாதிப்பு உள்ளவர்களின் உரிமைகளைப் புரிந்து கொள்ளவும், அவர்களை ஆதரிக்கவும், ஊக்குவிக்கவும் இந்த நாள் உதவுகிறது.
- 21 குரோமோசோமின் கூடுதல் நகலுடன் ஒரு குழந்தை பிறக்கும் போது இந்த மரபணு பாதிப்பு நிலை ஏற்படுகிறது.
- "3/21" என்ற தேதியானது 21வது குரோமோசோமின் மும்மடங்கைக் குறிக்கிறது என்ற நிலையில் இது மன நலிவுப் பாதிப்பு நிலைக்கான மரபணு காரணமாகக் குறிப்பிடப் படுகிறது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Improve Our Support Systems" என்பது ஆகும்.

# இதரச் செய்திகள்

## ஔரங்கசீப்பின் கல்லறைப் பிரச்சினை – மகாராஷ்டிரா




- சத்ரபதி சம்பாஜிநகர் மாவட்டத்தின் குல்தாபாத் நகரத்தில் அமைந்துள்ள முகலாயப் பேரரசர் ஔரங்கசீப்பின் கல்லறை விவகாரத்தில் நாக்பூரில் வன்முறை மோதல்கள்

வெடித்தன.

- ஔரங்கசீப், 300 ஆண்டுகளுக்கு முன்பு 1707 ஆம் ஆண்டு பிப்ரவரி 20 ஆம் தேதியன்று உயிரிழந்தார்.
- அவரது கல்லறை 14 ஆம் நூற்றாண்டின் சிஷ்டி துறவியான ஷேக் ஜைனுதீனின் தர்கா (சன்னதி) வளாகத்திற்குள் அமைந்துள்ளது.
- இந்த வளாகத்தில் ஔரங்கசீப் இறப்பிற்குப் பிறகு சிறிது காலம் பேரரசராகப் பதவி ஏற்ற அவரது மகன்களில் ஒருவரான அசாம் ஷா, ஐதராபாத்தின் முதல் நிஜாம் முதலாம் அசஃப் ஜா (1724-48), மற்றும் அசாஃப் ஜாவின் மகன் இரண்டாவது நிஜாம், நசீர் ஜங் (1748-50) ஆகியோரும் அடக்கம் செய்யப்பட்டனர்.

## கைபேசி அகலப்பட்டை இணைய சேவைக் குறியீடு

- நோக்கியா நிறுவனமானது, அதன் வருடாந்திரக் கைபேசி அகலப் பட்டை இணைய சேவைக் குறியீட்டின் (MBiT) தகவல்களை வெளியிட்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டில் இந்தியாவில் 5G தரவுப் பயன்பாட்டில் ஆண்டிற்கு மூன்று மடங்கு அதிகரிப்பு பதிவானது.
- 2024 ஆம் ஆண்டில் ஒரு பயனருக்குச் சராசரி மாதாந்திரத் தரவு நுகர்வு 27.5 ஜிகா பைட்டுகளாக அதிகரித்தது.
- செயலில் உள்ள 5G சாதனங்களின் எண்ணிக்கையானது ஆண்டிற்கு இரட்டிப்பாகி 2024 ஆம் ஆண்டில் 271 மில்லியனை எட்டியது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★